யப்பட்ட மேம்பாடுகளின் விளைவாகவும், வணிகப் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றின் காரணமாகவும், வணிகவரி அதிகாரிகளுக்கும், வரி செலுத்துவோருக்கும் இடையே இணக்கமான தொடர்பு நிலவியது. வணிகவரிச் சட்டங்களை இணக்கமாகச் செயல்படுத்தி, வணிகப் பெருமக்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இடையே தொல்லையின்றி அரசிற்குச் சிறந்த நன்மை பயக்கச் செய்வதற்கு இத்தொடர்பு பெரிதும் உதவியுள்ளது. பொது மக்களுக்கும் வணிகவரித் துறையினருக்கும் இடையே நிலவி வரும் இணக்கமான இத்தொடர்பும் நெருங்கிய ஒத்துழைப்பும் தொடர்ந்து நீடித்து நிற்குமென அரசு உறுதியாக நம்புகிறது.

இணைப்பு 4.

[35-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் இக்கோரிக்கையில் அடங்கியுள்ளன :—

266. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.	ரூ. 19,93,00,000
288. சமூகப்பாதுகாப்பும் நலனும்—சமூகப்பாதுகாப்பு—நலன் குறித்த ஏனைய திட்டங்கள்.	65,74,000
	ரூ. 20,58,74,000

அரசுப பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் முதலியோர் தொடர்பாக, ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை, அவர்களுடைய குடும்ப ஓய்வூதியம் ஆகிய செலவுகளைச் செய்வதற்காகவே இக்கோரிக்கையின்கீழ் மானியங்கள் கோரப் படுகின்றன.

[1977 ஆகஸ்ட் 4

ஓய்வூதியம் குறித்த பல்வேறு திட்டங்கள் பற்றிய சிறு குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) தமிழ்நாடு, தாராளமாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகள், 1960.—அரசுப் பணியாளர் ஒருவர், 25 ஆண்டுகள் தகுதிப் பணியை முடித்த பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெறுவார். 25 ஆண்டுகளை விட அதிக கால அளவுக்குப் பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சராசரி ஊதியத்தில் 33/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. இதைத்தவிர, முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறு மாதப் பணிக்கும் ஊதியத்தொகையின் 3/10 என்ற வீதத்தில் இறப்பு-ஓய்வூதிய பணிக்கொடையும் அனுமதிக்கப்படுகிறது. ஊதியத்தின் 16½ மடங்கு என்ற உயரளவுக்கு இது உட்பட்டதாகும்.

( ) தற்போது குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 ஆகும். இதைத்தவிர, பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 32 அகவிலைப்படி பெறவும் உரிமையுள்ளவராவர். முதலில் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியத்தில் 10 சதவீதம் என்ற வீதப்படி—இது மாதம் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வரையறைக்கு உட்பட்டதாகும்—கூடுதல் அகவிலைப்படி 1—1—1977 முதற்கொண்டு வழங்கப்பட்டுள்ளது.

(ii) ஓய்வூதியத்தொகை ரூ. 300 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலம் அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், ஆசிரியர்களது குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், பொதுவாக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகியோரும், அவர்கள் சென்னை மாநகரில் வசித்து வந்தால், தங்களது ஓய்வூதியங்களை பண அஞ்சல் மூலம் பெறலாம்.

(iii வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும், அரசுப் பணியாக்கப்பட்ட, பணிகளில் பணிபுரிவோர் அனைவருக்கும், தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த, அரசுப் பணியின் நீற்வாமல் வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும் அரசு ஓய்வூதிய நன்மைகளையும் ஏனைய நன்மைகளையும் அரசு வழங்கியுள்ளது.

(iv) ஓய்வூதியம் பெறுபவர்கள், வரையறுக்கப்பட்ட மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதியுள்ளவர்களாவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஆண்டு

[1977 ஆகஸ்டு 4

ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும். மாதம் ஒன்றுக்கு ரூ. 750 வரை ஓய்வூதியம் பெறுபவர்களும் பண்டிகை முன்பணம் பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

(2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதிய விதிகள், 1964.

(i) அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கையிலோ ஓய்வூதியம் பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும் சமயத்தில் குறைந்தது ஓராண்டுக்காலமாவது அரசுப் பணிபுரிந்திருக்க வேண்டும். அரசுப் பணியாளர் இறக்கும் பொழுது அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் இந்த ஓய்வூதியம் அமைந்ததாகும். குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற குறைந்த அளவிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 300 என்ற உயரளவு வரையில் மாறுபட்டதாகும். குடும்ப ஓய்வூதியம் என்பது விதவையின் ஆயுட்காலம் முழுவதும் அளிக்கப்படத்தக்கதாகும். அவரது இறப்புக்குப் பின்னரும், அந்த ஓய்வூதியத் தொகை, வயது வராத அவரது சிறுவர்களுக்கும் கொடுக்கப்படும்.

(ii) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 42 முதல் ரூ. 52 வரையில் அகவிலைப்படி பெறவும் அனுமதிக்கப் பட்டுள்ளது.

(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நலநிதித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் அரசுக்கு 1 ரூபாய் செலுத்துகின்றார். அரசுப் பணியாளர் பணியில் இருக்கையில் இறந்தால், அவர் குறிப்பிடு பவருக்கு அல்லது அரசுப்பணியாளரின் வாரிசுகளுக்கு ரூ. 10,000 கொடுக்கப்படுகிறது. இக்கணக்கில், அரசுக்கு ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் செலவு ஏற்படுகின்றது.

(4) ஆசிரியர் ஓய்வூதியம்.

தாராளமாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளில் கண்டுள்ள சில நன்மைகள் அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதனால், ஓய்வூதிய

நன்மைகளைப் பொறுத்தவரையில், அரசுப்பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அரசுப்பணியாளர்களுக்கு நிகராகப் பயன் பெறுகின்றனர்.

(5) நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.

அரசுப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்றதொரு திட்டம் நகராட்சிப் பணியாளர்களுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது. நகராட்சிகள் அளிக்கும் பங்குத் தொகைகள் உதவியுடன் இத்திட்டத்தின் உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் தலைமை ஆராய்வாளர் செயற்படுத்தி வருகிறார். இங்கும் குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படியும் அனுமதிக்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் பணியாளர்களும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வருகின்றனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS